சுருக்கம்

பொதுப் பணிகள் – அலுவலக நடைமுறை – பச்சை நிற மை (Green Ink) பயன்பாடு குறித்த தெளிவுரை வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

---

பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எ) துறை

அரசு ஆணை(நிலை) எண். 151

நாள். 21. 10.2010
ஐப்பசி 04
திருவள்ளுவர் ஆண்டு 2041

**ஆணை:**

பச்சை நிற மை (Green Ink) பயன்பாடு குறித்து அரசிடம் தெளிவுரைகள் கோரப்பட்டுள்ளன. இதனை அரசு கவனமாக பரிசீலித்து கீழ்கண்டவாறு ஆணையிடுகிறது :-

அரசு அலுவலகங்களில் நிலைத்த நீலம் (Permanent Blue), கருநீலம் (Blue Black) அல்லது கருப்பு வண்ண (Black) மையினை மட்டுமே அரசு ஆவணங்களில் எழுதுவதற்கு பயன்படுத்தலாம் எனவும், இவைகளைத் தவிர பிற வண்ண மையின் பயன்பாட்டினைத் தடை செய்தும், வரைவு ஆணைகள்/ அறிவிக்கைகள்/ விதிகள் போன்றவற்றில் திருத்தம் செய்யும்போது பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பச்சை நிற (Green) மையினையும், சட்டத் துறை சிவப்பு நிற (Red) மையினையும் பயன்படுத்தலாம் எனவும், அரசு அலுவலகங்களில் மை ஊற்று எழுதுகோலுடன் (Fountain Pen), பந்துமுனை (Ball point) /கூழ்ம மை (Gel) எழுதுகோலையும் பயன்படுத்த அனுமதிக்கலாம் எனவும், அரசு ஆணை (நிலை) எண்.189, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எஸ்) துறை, நாள் 18.07.2007–ன்படி, சான்றொப்பம் இடுவதற்கு அனுமதிக்கப்பட்ட அலுவலர்கள் பச்சை நிற மையினை(Green ink) சான்றொப்பம் இடுவதற்கு பயன்படுத்தலாம் எனவும், தொகுதி ‘அ’ அலுவலர்கள் மட்டும் அரசு கோப்புகளில் சிறு குறிப்புகள் எழுத பச்சை நிற மையினை (Green ink) பயன்படுத்தலாம் எனவும் அரசு ஆணையிடுகிறது.

(த.பி.பா.)

2. மேற்காணும் ஆணைக்கிணங்க தலைமைச் செயலக நடைமுறை நூலின் பத்தி 557 மற்றும் அரசு அலுவலக நடைமுறை நூலின் பத்தி 14--A ஆகியவற்றிற்கு உரிய திருத்தங்கள் தனியே வெளியிடப்படும்.

/ஆளுநரின் ஆணைப்படி/

கே.என். வெங்கட்ரமணன்
அரசு செயலாளர்

பெறுநர்

அனைத்துத் துறைச் செயலாளர்கள், சென்னை--600 009.
அனைத்துத் தலைமைச் செயலகத் துறைகள், சென்னை--600 009.
அனைத்துத் துறைத் தலைவர்கள் / மாவட்ட ஆட்சியர்கள் / மாவட்ட நீதிபதிகள் / தலைமைக் குற்றவியல் நீதிமன்ற நடுவர்கள் உட்பட.
பதிவாளர், உயர்நீதிமன்றம், சென்னை-- 600 104.
செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் , சென்னை--600 002.

<u>நகல்</u>

முதலமைச்சரின் செயலாளர், சென்னை -- 600 009.
முதுநிலை நேர்முக உதவியாளர், அமைச்சர் (சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள்), சென்னை -- 600 009.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் அனைத்து அதிகாரிகள் மற்றும் பிரிவுகள், சென்னை -- 600 009.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை--600 009.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பயிற்சி) துறை செயலாளரின் தனிச்செயலாளர், சென்னை -- 600 009.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (நிசீ. II/கணினி) துறை, சென்னை -- 600 009.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

நா. விநாயகமூர்த்தி
21/10/2010
பிரிவு அலுவலர்